# நெய்தல் நில மக்களின் பொருள்சார் பண்பாடு

*முனைவர் கி.ஜா. பிரிசில்லா*
இணைப்பேராசிரியர்
ஏ.டி.எம். மகளிர் கல்லூரி (தன்னாட்சி), நாகப்பட்டினம்
https://doi.org/10.5281/zenodo.14383180

**ஆய்வுச் சுருக்கம்**

*நெய்தல் நில மக்களின் வாழ்வியலை நுட்பமாக அணுகும் போது அக்கால மக்கள் தங்களின் நிலத்திற்கென்று தனித்தன்மை கொண்ட பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு வாழ்ந்து இருப்பது சங்க நூல்களின் வழி அறிய முடிகின்றன. நெய்தல் நில மக்கள் மீன் பிடித்தல், முத்தெடுத்தல், உப்பு விளைவித்தல், மீன் உலர்த்துதல் போன்ற கடல் சார்ந்த தொழில்களை மட்டுமே செய்து வாழ்ந்துள்ளார்கள். மற்ற நில மக்களை விட நெய்தல் நில மக்கள் தங்களுக்கென்று தனித்த நில அடையாளம், குடியிருப்பு, தொழில், பழக்கம், பண்பாடு, உணவு உடை, அணிகலன் போன்ற பல்வேறு கூறுகளால் தனித்தன்மையுடன் வாழ்ந்தனர். ஆகவே அந்நில மக்களின் பண்பாட்டுக் கூறுகளில் பொருள்சார் பண்பாட்டினை மட்டும் கண்டறிந்து வெளிப்படுத்துகிறது இக்கட்டுரை.*

*சங்க நூல்கள் பண்டைத் தமிழ் மக்களின் பண்பாட்டுக் கூறுகளை எடுத்தியம்பும் பெட்டகமாக விளங்குகிறது. சங்க கால மக்கள் பல்வேறு பண்பாடுகளைத் தன்னகத்தை கொண்டு பண்பட்ட வாழ்க்கை முறையினை வாழ்ந்தனர் என்பதே சங்க இலக்கியப் பாடல்கள் வழி தெளிவாக புரிந்து கொள்ள இயலும். இதன் அடிப்படையில் சங்க இலக்கிய நூல்களில் காணப்படும் நெய்தல் நில மக்களின் பொருள்சார் பண்பாட்டின் கூறுகளை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.*

**பண்பாடு - சொல் விளக்கம்**

*பண்பாடு என்ற சொல்லைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் வரையறுத்து விளக்குவது இயலாதது ஆகிறது. ‘‘பண்பாடு என்ற சொல் பண்பு + அடுதல் என்பதன் கூட்டு. அடுதல் ‘ஆடு’ ஆகும். அடுதல் என்பதற்கு சமைத்தல் என்று பொருள்‘‘ (கழகத் தமிழ் அகராதி, ப.17) என பண்பாட்டிற்கு கழகத் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது. ‘சமைத்தல்’ என்பது பக்குவப்படுத்துதல் எனவும் பொருள்படும். பண்பை பக்குவப்படுத்துவது பண்பாடாகும். மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது பண்பாடு’’ என்று (கலைக்களஞ்சியம், ப.22) கலைக்களஞ்சியம் பண்பாட்டிற்கு விளக்கம் தருகின்றது.*

**பொருள்சார் பண்பாடு**

*மனிதனால் செய்யப்படும் ஆடை, அணிகலன்கள், ஓவியங்கள், கட்டிடங்கள், அழகு பொருட்கள், போக்குவரத்து சாதனங்கள் போன்ற இன்னும் பிற பொருள்களும் பொருள் சார் பண்பாட்டில் அடங்கும். வரதராசன் ‘‘மக்கள் அவர்களின் தேவைகளுக்காக செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருட்களும் பொருள் சார் பண்பாட்டில் அடங்கும்’’ (தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன், ப.33) என்று குறிப்பிடுகின்றார்.*

**நெய்தல் நில மக்களின் குடியிருப்பு**

*நெய்தல் நில மக்கள் அமைத்த குடியிருப்புகள் நிலப் பகுதிகளை கிடைத்த பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டதாயிருந்தன. பரதவை*

இன மக்கள் குடியிருந்த உறைவிடம் இல், மனை, பதி சிற்றில் என அழைக்கப்பட்டுள்ளன.

**"ஒருநாள் உறைந்திசி னோர்க்கும் வளிநாட்**
**டம்பதி மறக்கும் பண்பின் எம்பதி" (அகம்.200)**

கடலில் மீன் பிடித்தல் தொழில் செய்து வாழ்ந்த பரதவர்கள் அந்நிலத்தில் கிடைத்த புல், மரங்கள், ஓலை ஆகியவற்றை கொண்டு உறைவிடங்களை அமைத்துக் கொண்டனர். கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டிருந்த அவர்களின் குடியிருப்பு முள்ளினால் வேயப்பட்ட கூரைகளை உடையதாக காணப்பட்டது என்பதை நற்றிணை 354ம் பாடல் வெளிப்படுத்துகிறது.

## ஆடைகள்

பொருள்சார் பண்பாட்டில் முக்கியமாக இடம்பெறுவது ஆடைகள் ஆகும் ஆடைகளும் அணிகளும். ஒரு நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் காட்டு வதில் சிறந்த இடம் பெறுகின்றன.

## தழையாடை

பரதவ மக்களிடையே இலை தழைகளால் ஆன ஆடைகளும் நூலிலால் தயாரிக்கப்பட்ட ஆடைகளும் பயன்பாட்டில் இருந்துள்ளன. இவற்றுள் தழை ஆடைகள் அணிந்த செய்திகளை பெரும்பான்மையாக சுட்டப்பட்டுள்ளன. "தழையாடை ஆதியில் இருந்தது என்றும் அதை நயமுறப் பின்னுவதில் தமிழர் தேர்ச்சிப் பெற்றிருந்தனர்" (சங்ககால வாழ்வியல், ப.40) என்று சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். பெண்கள் தங்கள் தோழிமார்களுடன் அதிகாலையில் கடற்கரைச் சோலைக்குச் சென்று அங்குள்ள நெய்தல் பூவோடு வேறு நிறங்களை உடைய பூக்களையும் தளிர்களையும் பறித்து தொடுத்துள்ளனர். அப்போது தலையாடை அணிந்திருந்தனர் என்று

**"கானல் ஆயமொடு காலைக் குற்றகள்**
**கமழ் அல தண்ணறுங் காவி**
**அம்பகை நெறித்தழை அணிப்பெறத் தைஇ"**
**(நற்.125)**

நற்றிணை பாடல் குறிப்பிடுகிறது.

## நூலாடை

சங்க கால நெய்தல் நில மக்கள் நூலாடை அணிந்தமைக்கான சான்றுகள் இல்லை. ஆனால் அந்த ஆடை வழக்கத்தில் இருந்துள்ளது.

**"முழங்குதிரை கொழீஇய மூரி எக்கர்**
**நுணங்கு துகில் நுடக்கம் போலக் கணம் கொள்"**
**(நற்.15)**

என்பதில் உள்ள 'நுணங்கு துகில்' என்பது நூலால் ஆகிய ஆடையினை குறிக்கும் ஆகையால் நூலாடைகளை நெய்தல் நில மக்கள் பயன்படுத்தி யிருக்கலாம் என அறிந்து கொள்ளலாம்.

## அணிகலன்கள்

அணிகலன்களை அழகு ஊட்டவும், செல்வ வளத்தை காட்டவும், பண்பாட்டை உணர்த்தவும், நாகரிக மேம்பாட்டை வெளிப்படுத்தவும் பயன்படுத்தினர். ஆண்களை விட பெண்களே அதிகமான அணிகலன்களை அணிந்துள்ளனர் "உலக மக்களுள் தமிழர்களைப் போல ஒப்பனைக்கு அணிகலன்களை மிகுதியாக பயன்படுத்தியவர்கள் வேறு எந் நாட்டவரும் இல்லை" (தமிழர் சமயம், ப.26) என்கிறார் கா. சுப்பிரமணியப்பிள்ளை.

## காதணி

சங்க கால மகளிரிடையே காதில் அணியக் கூடிய காதணிகளை அணியும் வழக்கம் காணப்பட்டது. நெய்தல் நில மகளீர் காதில் அணிகலன் அணிந்திருந்தனர். இதனை குழை என்று அழைத்துள்ளனர்.

**"கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக்கண்**
**அமர்ந்து இனிது நோக்கமொடு செகுத்தன"**
**(நற்.16)**

என்றப் பாடல் மேற்கண்ட கருத்தினை மெய்ப்படுத்துகின்றன.

## கையணி

மகளிர் கைகளில் அணிகள் அணியும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது. "தொடி, கடகம், வளை, கையுந்தி போன்றவை கைகளில் அணியப்பட்டன" (சங்க கால மகளிர் வாழ்வியல், ப.352) பெரும்பாலும் சங்கினால்

*செய்யப்பட்ட வளையல்களையே கைகளில் அணிந்து இருந்தனர். சங்கு வளையல்களை அணியும் வழக்கத்தை கொண்டிருந்தனர் என்பதை*

***திரு முகத்து அலமரும் பெரு மதர் மழைக்கண்***
***அணிவளை முன்கை ஆய் இதழ் மடந்தை"***

***(அகம்.361)***

*என்ற வரிகள் புலப்படுத்தும்.*

*தோள் வளை என்பது பெண்கள் கையின் மேல் பகுதியில் அணியும் அணிகலன் ஆகும். இதுவும் தலைவியின் உடல் மெலிவினை பிரிவு துன்பத்தை வெளிப்படுத்தும் ஒரு பொருளாகவே காட்சிப்படுத்த பெற்றுள்ளது.*

***"மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்***
***புல்லென் றனவென் புரிவளைத் தோளே"***

***(ஐங்.133)***

*என்றப் பாடல் தலைவன் பிரிந்த மையால் தலைவியின் உடல் மெலிவுற்று அதன் காரணமாக தோள் வளை நெகிழ்ந்த நிலையினை புலப்படுத்துகின்றன.*

**சிலம்பு**

*பெண்கள் காலில் அணியும் ஒரு வகை அணிகலனாகும். இவ் வணிகலன் களவு காலத்தில் தலைவி அணிந்திருந்தமையை நெய்தல் பாடல்கள் சுட்டுகின்றன.*

*சிலம்பு என்ற அணிகலன்களை அணிவதும் அதனை கழற்றுவதுமான ஒரு பண்பாடு நெய்தல் நில மக்களிடம் காணப்பட்டது என்பதை*

***"பைந்தழை சிதையை கோதை வாட***
***நன்னர் மாலை நெருணை நின்னொடு***
***சிலவிலங்கு எல்வளை நெகிழ***
***அலவன் ஆட்டுவோள் சிலம்புஞெமிர்ந் தெனவே"***

***(நற்.363)***

*என்றப் பாடல் அடிகள் மெய்படுத்தி நிற்கின்றன.*

**இழை அணி**

*நெய்தல் நில மகளிர் இடுப்பிற்கு கீழே ஒரு வகையான அணிகலனை அணிந்துள்ளனர். இதனை இழை அணி என்றும் தழை அணி என்றும் அழைத்துள்ளனர். இவ்வணிகலனை பெரும்பாலும் விழா காலத்தில் ஆடும் மகளிர் அதிகமாக அணிந்துள்ளமையைப் பாடல்கள் சுட்டிக் காட்டுகின்றன.*

***"கண்அறி வுடைமை அல்லது நுண்வினை***
***இழையணி அல்குல் விழாவாடு மகளிர்" (நற்.138)***

**போக்குவரத்து சாதனங்கள்**

*அனைத்து பொருட்களும் ஒரே இடத்தில் உற்பத்தி செய்வதில்லை. ஆனால் அனைத்து பொருட்களின் பயன்பாடும் எல்லா மக்களுக்கும் தேவைப்படுகிறது. சங்க காலத்தில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு யானை, குதிரை, எருது, கோவேறு கழுதை முதலிய விலங்கினங்களை பயன்படுத்தி உள்ளனர். நெய்தல் நிலத் தலைவர்கள் குதிரை பூட்டிய தேர்களையும், உமணர்கள் எருதுகள் பூட்டிய தேர்களையும் உமணர்கள் எருதுகள் பூட்டிய வண்டிகளையும் பயன்படுத்தி நிலத்தினிடையே பயணம் மேற்கொண்டு உள்ளனர்.*

**குதிரை**

*நெய்தல் நிலத்தின் தலை மக்களாக கருதப்படும் சேர்ப்பன், துறைவன், புலம்பன் என்பவர்கள் குதிரை பூட்டிய நெடுந்தேரில் வந்து கடற்கரைச் சோலைகளில் பரதவ இனப் பெண்ணான தலைவியுடன் களவு மேற்கொண்டு சென்றதனை பாடல்கள் வழி அறிய முடிகிறது.*

***"கொண்க னூர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர்***
***தெண்கட டைகரைத் தெளிமணி யொலிப்ப"***

***(குறு.212)***

*நெய்தல் நிலத் தலைவன் தலைவியே மணமுடித்து அழைத்துச் செல்லும் போது அத்தேரை இழுக்க குதிரைகள் பயன் படுத்தப்பட்டதை*

***"பூம்பொறி பல்படை ஒலிப்பப் பூட்டி***
***மதியுடை வலவன் ஏவலின் இகுதுறைப்***
***புனல் பாய்ந்தன்ன வாம்மான் திண்தேர்க்***
***கணை கழிந்தன்ன நோன்கால் வண்பரி"***

***(அகம்.400)***

*இப்பாடல் வழி அறிய முடிகிறது.*

**எருதுகள்**

நெய்தல் நிலத்தில் எருதுகள் பூட்டிய வண்டியினை பயன் படுத்தியவர்கள் உமணர்களே ஆவர். இவர்களின் முக்கியமான தொழில் நெய்தல் நிலத்தின் கழிமுகப் பகுதிகளில் விளைவிக்கப்பட்ட உப்பினை எருதுகள் பூட்டிய வண்டிகளில் ஏற்றி சென்று மற்ற நிலத்தில் உள்ள ஊர்களில் விற்று வருவதே ஆகும்.

***"உமணர் வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்
கணநிரை கிளர்க்கும் நெடுநெறி ச் சகடம்" (நற்.4)***

என்ற பாடல் உமணர்கள் வண்டியில் உப்பினை ஏற்றி சென்று விலை கூறி விற்ற நிகழ்வினை புலப்படுத்துகின்றன.

**கழுதை**

நெய்தல் நில மக்கள் உப்பை மூட்டைகளாக கட்டி கழுதை மீது ஏற்றி உப்பளத்தின் மேற்புறம் உள்ள ஊருக்கு கொண்டு சென்றனர் என்னும் செய்தி

***"நிரைப் பரைப் பொறைய நரைப் புற கழுதை
குறைக் குளம்பு உதைத்த கல்பிறழ் இயலின்"
(அகம்.207)***

எந்த வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கடல் ஊர்திகள்**

நிலப்பரப்பில் தேரினையும் வண்டியினையும் பயன்படுத்தியதைப் போன்று கடலின் வழியாக ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வாணிபத்தின் பொருட்டும் மீன் வேட்டம் செய்யும் பொருட்டும். பயணம் மேற்கொள்ள அம்பி, புனை, திமில், நாவாய் வங்கம், கலம், தோணி போன்ற மரக்கலன்களை பயன்படுத்தி உள்ளனர்.

**அம்பி**

அம்பி என்ற சொல்லுக்கு நீர் என்ற பொருளும் உண்டு. அம்பி என்பது எவ்வித பாய் மரமும் இன்றி காணப்படுவதால் அது கடற்கரையில் இருந்து வெகு தூரம் சென்றிருக்க இயலாது அம்பி மிகச்சிறியதாக இருப்பினும் இதில் சென்ற பரதவர்கள் அதிகமான மீனை பிடித்து வந்துள்ளனர்.

***"வடிக்கதிர் திரித்த வல்ஞான் பெருவலை
இடி க்குரல் புணரிப் பௌவத்து இடுமார்
நிறையப் பெய்த அம்பி காழோர்
சிறை அருங் களிற்றின் பரதவர் ஓய்யும்" (நற்.74)***

**புணை**

மரங்களை சேர்த்து பிணைத்து இது உருவாக்கப்பட்டதால் பிணை - புணை என்று குறிப்பிட்டு இருக்க வேண்டும். இதில் சென்று பரதவர்கள் மீன்பிடித்து வந்ததாக செய்திகள் இல்லை. இது உயிர் காக்க உதவும் மரக்கலமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

***"கரைக்காணப் பெறவத்துக் கலம்சிதைந்து ஆழ்பவன்
திரைதரப் புணைபெற்றுத் தீதின்று உய்த்தாங்கு"
(கலி.134)***

என்ற பாடல் அடிகள் புணையின் பயன்பாட்டினை கூறுகிறது.

**தோணி**

பரதவர்கள் மீன்களைப் பிடித்து அதனை துண்டித்து தோணியில் ஏற்றுக் கொண்டு வந்துள்ளனர் இதனை,

***"வாள்வாய் ச் சுறவொடுவயமீன் கெண்டி
நிணம்பெய் தோணியர் இகுமணல் இழிதரும்"
(நற்.111)***

எந்த பாடல் அடிகள் இயம்பி நிற்கின்றன. இவ்வாறாக நெய்தல் நில மக்கள் பல கடல் ஊர்திகளை தொழிலுக்காகவும் வாணிப நோக்கத்திற்காகவும் பயன்படுத்தி உள்ள தன்மையினை இதன் வழி அறிய முடிகிறது.

**தொழில் கருவிகள்**

நெய்தல் நில மக்கள் மீன்பிடிப்பதற்கு வலையைப் பயன்படுத்தினர். அவ்வாறு அவர்கள் பயன்படுத்திய வலைகள் பல்வேறு வகைகளில் அமைந்துள்ளன. மீன் பிடிக்கும் காலம், மீனின் வலிமை, வடிவம் ஆகிய பண்புகளின் அடிப்படையில் வெவ்வேறு வகையில் கையாளப் பெற்றுள்ளன.

**குறுங்கண் வலை**

குறுங்கண் வலையென்பது சிறிய கண்களை உடையதாக பின்னப்பட்டிருக்கும் அழகிய

*தன்மை கொண்டது. இவ்வலையில் நீண்ட கயிறு கட்டப்பட்டிருக்கும். இதனால் திரளான மீன் இனங்களைப் பிடித்துவர இயலும். இதனை,*

***"நெடுங்கயிறு வலந்த குறங்கண் அவ்வலைக்***
***குடல்பா டழிய வினமீன் முகந்து" (அகம்.30)***

*என்ற பாடல் அடிகள் காட்சிப்படுத்துகின்றன.*

**நுண்ஞாண் வலை**

*நுண்ணிய கயிற்றினால் கட்டப்பட்ட அழகிய வலை. இவ்வலையினைக் கொண்டே பரதவ இனத்தாரில் காணஞ்படும் இளஞ் சிறார்கள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். இவ்வலையினைக் கொண்டு நெய்தல் நிலச் சிறுவர்கள் கொக்கினைப் பிடித்துள்ளனர்.*

***"கொழுமீன் வல்சிப் புன்றலைச் சிறாஅர்***
***நுண்ஞான் அவ்வலைச் சேவல் பட்டென்"***
***(அகம். 290)***

**வரிவலை**

*சிறார்கள் பயன்படுத்திய மற்றொரு வலை விரிவலை ஆகும். இவ்வலையினைக் கொண்டு மீன்வேட்டம் சென்ற சிறுவர்கள் இறால் மீலுடன் பலவாய்த் தொகுக்கப்பட்ட வகை வகையான மீன்களைப் பிடித்து வந்துள்ளனர். இந்நிகழ்வினை,*

***"அத்த இருப்பைப் பூவின் அன்ன துய்த்தலை***
***இறவொடு தொகைமீன் பெறீஇயர்வுரிவலைப்***
***பரதவர் கருவினைக் சிறாஅர்" (நற்.111)***

*என்ற பாடலடிகள் விளக்குகின்றன.*

**அரில் வலை**

*அரில் வரை என்பது அடிக்கடிச் சிக்குண்டு வீடும் தன்மை வாய்ந்தது. கடலின் தன்மையை அறிந்து மீன்வேட்டம் செல்லக் காத்திருக்கும் பரதவர்கள் அந்நேரத்தில் சிக்குண்ட அரில் வலைகளைச் சரிசெய்துள்ளனர். இதனை,*

***"தண்பெரும் பரப்பின் ஒண்பதாம் நோக்கி***
***அங்கண் அரில்வலை உணக்கும் துறைவனொடு"***
***(நற்.4)***

*என்ற பாடலடிகள் காட்டுகின்றன.*

**முடிவலை**

*அதிகமான முடிச்சுக்களால் பின்னப்பட்ட வலை முடிவலை எனப்படும். இவ்வலையினைக் கொண்டு வளைந்த முதுகினையுடைய இறால் மீனைப் பிடித்துள்ளனர். இதனை*

***"முடிவலை முகந்த முடங்கிறாப் பாவைப்***
***படுபுள் ஓப்பலின் பகல்மாய்ந் தன்றே" (நற்.49)***

*என்ற பாடல் வழி அறிந்து கொள்ள முடிகிறது.*

**செங்கோல் வலை**

*நேரிய செங்கோல் கட்டிய வலை கருவியைக் கையில் கொண்டவாறு நீண்ட படகில் தன் தந்தை மீன் பிடிக்கும் தொழிலில் தங்கிய செய்தியை*

***"கொடுந்தொழில் முகந்த செங்கோல் அவ்வலை***
***நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு"***
***(அகம்.60)***

*இவ்வரிகள் சுட்டி செல்கின்றன.*

**உணவு**

*மக்களின் மிகவும் இன்றியமையாத தேவைகளுள் ஒன்று உணவு. உமணர் கூட்டம் யானையின் இறைச்சியை தீக்கடை கோலால் உண்டாக்கிய சிறிய தீயில் வாட்டி நின்று கொண்டு வந்த நீர் கொண்டு உலையில் இட்டு ஒன்று கூட்டி உண்டதனை*

***"ஞெலிகோற் சிறுதீ மாட்டி, ஒலிதிரைக்***
***கடல்விளை அமிழ்தின் கணம்சால் உமணர்***
***சுனைகொள் தீம்நீர்ச் சோற்று உலைக்கூட்டும்"***
***(அகம்.169)***

*அறிய முடிகிறது.*

*கடல் சார்ந்த இடத்தில் வசிக்கும் மக்கள் சுறா, மீன்வற்றல், அயி ரைமீன், கருவாடு, கொழுமீன் ஆகிய கடலுணவுகளைச் சமைத்து உண்டதனை,*

***"பழந்திமில் கொன்றை புது வலைப்பரதவர்***
***மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி***
***மணம் கமழ் பாக்கத்து பகுக்கும்" (அகம், 10)***

*என்ற வரிகள் உணர்த்துகின்றன. இப்பாடலில் பரதவர் சுறா மீனைத் தாமும் தின்று பக்கத்தில் பலருக்கும் பகுத்தும் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது.*

**முடிவுரை**

*இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பண்பாட்டு நிகழ்வுகள் அவ் இலக்கியங்கள்*

*எழுந்த காலகட்ட மக்களின் வாழ்க்கை முறைகளையும் வாழ்ந்த விதங்களையும் அறிய உதவும் சான்றுகளாக விளங்குகின்றன. இதன் அடிப்படையில் நெய்தல் நில மக்களின் வாழ்வியலில் காணப்பட்ட பண்பாட்டுக் கூறுகளுள் பொருள் சார் பண்பாட்டின் பதிவுகள் இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.*

**தொகுப்புரை**

*நெய்தல் நில மக்களின் பண்பாட்டுக் கூறுகள் என்னும் தலைப்பிலான இக் கட்டுரையில் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் என்னும் பகுதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு நெய்தல் நில மக்களின் குடியிருப்புகளைப் பற்றியும் பொருள் சார் பண்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும் ஆடைகள் அணிகலன்கள் போன்றவை மீனவர்களின் வாழ்வியலில் எவ்வாறு பங்கு வகிக்கின்றன என்பன பற்றியும் அவர்கள் போக்குவரத்துசாதனங்களாகஎவற்றையெல்லாம் பயன்படுத்தினார்கள் என்றும் தொழில் கருவிகளான வலைகளின் வகைகளை பற்றியதான விளக்கங்களையும் இக்கட்டுரை ஆய்வுக் குட்படுத்தி நெய்தல்நில மக்களின் பொருள்சார் பண்பாடுகள் மற்ற திணை மக்களின் பண்பாடுகளிலிருந்து வேறுபட்டவை என அறிய முடிகிறது.*

**துணைநூற்பட்டியல்**

1. *இளம்பூரணர் (உ.அ), தொல்காப்பிய பொருள் அதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.*
2. *தா.சண்முகம், கழகத் தமிழ் அகராதி, தமிழ் வெளியீட்டு கழகம், தமிழக அரசு, சென்னை*
3. *கா.சுப்பிரமணியம் பிள்ளை, தமிழர் சமயம், வை சண்முக முதலியார் வெளியீடு, வாணியம்பாடி*
4. *ச.வே.சுப்பிரமணியன், சங்க கால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை 3.*
5. *இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம் (எட்டுத்தொகை), தமிழ் புத்தகாலயம், சென்னை*
6. *க.திலகவதி, சங்க கால மகளிர் வாழ்வியல், தமிழ் பல்கலைக்கழகம், இறையருள் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.*
7. *நா.பாலுச்சாமி (மு.ப.ஆ),கலைக்களஞ்சியம் தொகுப்பு ஐ,தமிழ் வளர்ச்சி கழகம், சென்னை*
8. *வெ.வரதராசன், தமிழரின் ஒப்பனை கலைத்திறன், தமிழ் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர்.*